துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை [11-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 311

வீரமரணம்

கடந்தமாதம் 16 ஆம் திகதி மணலாற்றில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை சூரி (மார்க்கண்டு தேவராஜா-திருமலை) நேற்று முன்தினம் வீரமரணமடைந்துவிட்டார். (ஒ-15)

முகம்மது மீதான பிரேரணை தோல்வியுற்றது!

அரச தரப்புக்கு 38 அதிக வாக்குகள்

கொழும்பு, அக்டோபர் 11

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையின் மீது நீண்ட நேரம் நடைபெற்ற விவாதத்தின் பின்னர் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக- எதிர்க்கட்சிகளின் தரப்பில் - 85 வாக்குகள் கிடைத்தன. பிரேரணையை எதிர்த்து - அரச தரப்பில் - 123 எம். பிக்கள் வாக்களித்தனர்.

நேற்றுப் பகல் முழுவதும் பிரேரணை மீது விவாதம் நடைபெற்றது. நேற்றிரவு வாக்கெடுப்பு இடம்பெற்றது. வாக்கெடுப்பின் போது பங்குபற்றிய கட்சிகள், மற்றும் எம். பிக்களின் விபரம் குறித்து முதற்கட்டச் செய்திகளே பத்திரிகை அச்சுக்குப் போகும்போது கிடைத்திருந்தன.

அதன் படி—

ஆளும் ஐ. தே. கட்சிக்கு ஆதரவாக— பிரேரணையை எதிர்த்து— தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் எம். பிக்கள் வாக்களித்தனர்.

எதிர்க்கட்சிகள் தரப்பில்— பிரேரணையை ஆதரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகியவற்றுடன் சேர்ந்து ஆளும் ஐக்கியதேசியக் கட்சியின் அதிருப்திக் குழு எம். பிக்கள் 7 பேரும் வாக்களித்தனர்.

சபாநாயகர் முகம்மது மீது எதிர்க் கட்சிகள் வசைமாரி!

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்க்கட்சிகள் சபாநாயகரை மிகவும் கேவலமாகத் தாக்கி, கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தன.

சபாநாயகர் நாணயக்குறைவாக நடந்துகொண்டார்; ஊழல்களில் சம்பந்தப்பட்டுள்ளார்; பதவிக்குரிய கண்ணியத்தைக் காப்பாற்றத் தவறினார்; ஜனாதிபதிக்கு எதிரான மனுவை நிராகரிக்கப் பெரும் தொகையான பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டார்; ஜனநாயக நாடாளுமன்ற முறைகளுக்கு எதிராக, நாடாளுமன்ற பாரம்பரியங்களைக் கெடுக்கும் விதத்தில் நடந்துகொண்டார் என்று பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடுக்கடுக்காக சபாநாயகர் மீது சுமத்தினர்.

எனினும் சபாநாயகரின் செயற்பாடு ஒழுங்கானது என்று அரசதரப்பு எம்: பிக்கள் சபையில் வாதிட்டனர். [உ-எ-3]

சபாநாயகருக்கு லஞ்சம் வழங்க பலர் முயன்றனர்!

அவரே கூறியதாக சிறிமா தகவல்

கொழும்பு, அக். 11

''ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணையை நிராகரிக்கும்படி கோரி பலர் தமக்கு லஞ்சம் தர முன்வந்தனர் என்பதை சபாநாயகர் முகம்மது என்னிடம் தெரிவித்தார்.''

— இவ்வாறு கூறினார் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. சபாநாயகருக்கு எதிரான பிரேரணையின் மீது நேற்று நாடாளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

''பலர் லஞ்சம் தர முன்வந்த போதிலும் தாம் அதை ஏற்கவில்லை என சபாநாயகர் என்னிடம் சொன்னார். இதன் மூலம் சபாநாயகர் லஞ்சம் பெற வாய்ப்பு இருந்தது என்பது தெளிவாகுகின்றது'' — என்றும் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

''ஜனாதிபதிக்கு நெருக்கமான தொழில் அதிபர் ஒருவரிடமிருந்து பெரும் தொகைப் பணத்தை சபாநாயகர் லஞ்சமாகப் பெற்றார்'' என்று சுதந்திரக் கட்சி எம். பியான ரிச்சர்ட் பத்திரன நேற்று சபையில் குற்றம் சுமத்தினார். (உ-எ-3)

முகம்மது ராஜினாமாச் செய்வாரா?

கொழும்பு அக். 11

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து—

அவர் தமது பதவியில் தொடர்வாரா அல்லது ராஜினாமாச் செய்வாரா? - என்ற கேள்வி நேற்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்தது.

பிரேரணை தோற்றுவிட்டாலும் கூட, சபாநாயகர் எதிர்க்கட்சி எம். பிக்களின் மதிப்பை இழந்து விட்டதில், அவர் தொடர்ந்தும் பதவி வகித்துத் தமது கடமைகளைச் செய்வது கஷ்டமாகவும், இக்கட்டாகவும், சங்கடமாகவும் இருக்கும். ஆகையால் அவர் அனேகமாகப் பதவியை ராஜினாமாச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அரசாங்கத் தரப்பினர் அதனைத் தடுக்க முயல்வர் என்று சொல்லப்படுகிறது. அல்ஹாஜ் முகம்மது ராஜினாமாச் செய்யும் பட்சத்தில் எதிர்க் கட்சியினர் ஐ. தே. கட்சி அதிருப்தியா

[4 ஆம் பக்கம் பார்க்க]

நேற்றும் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 11

சேந்தாங்குளம் கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்று மாலை 6 30 மணியளவில் படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர். [ஒ-15]

அக்கரைப்பற்றில் தேடுதல்; 200 தமிழர் கைதாகினர்!

அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து நடத்திய தேடுதலின் போது சுமார் 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

142 பேர் மேல் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டனர். ஏஞ்சியோர் விடுவிக்கப்பட்டனர்.

ஊர்மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே இச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா நேற்று வாராந்திரச் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார். [ஒ-எ]

கொழும்பு சார்க் மாநாடு:

இந்தியப் படை உதவி ஸ்ரீலங்கா அரசு கோருகிறது!

புதுடில்லி, அக். 11

அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பில் நடக்கவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டின்போது விடுதலைப் புலிகளோ அல்லது ஜே. வி. பியினராலோ அச்சுறுத்தல் ஏற்படாதவாறு தடுக்க, இந்திய கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் ஒத்துழைப்பை ஸ்ரீலங்கா அரசு கோரியிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் கோரிக்கையை இந்திய அரசு தற்போது தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

நயினை கடற்படை முகாம் மேலும் பலப்படுத்த முடிவு

கொழும்பு, அக். 11

நயினாதீவில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படை முகாம் பலப்படுத்தப்பட உள்ளது.

மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நயினாதீவில் மேலும் இரு கடற்படைப் பிரிவுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும்—

தீவுப்பகுதிகளில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படியும்—

கடற்படை ரோந்துச் சேவையை அதிகரிக்கும்படியும், கடற்படை பதில் தளபதி ரியர் அட்மிரல் கிளென்சி பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார் என்று பாதுகாப்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

அரசைக் கவிழ்ப்பதற்கு தூபமிட்டவர் முகம்மதுவே!

நாடாளுமன்றில் வீரவன்னி ஆவேசம்

கொழும்பு, அக். 11

''ஜனாதிபதி பிரேமதாஸா மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரும் யோசனையை எமக்குத் தந்தவரே சபாநாயகர் முகம்மது தான். அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளுக்கு தூபமிட்டு ஊக்கமளித்தவரும் அவரே''

— இவ்வாறு குற்றம் சுமத்தினார் ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த எம். பியான சமரவீர வீரவன்னி.

நேற்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

சபாநாயகர் முகம்மதுவிற்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விவாதத்தின் முதல் இரண்டு மணிநேரமும் சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும் நிலவியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சி எம். பிக்களும் எதிர்க்கட்சிகளும் ஆளுக்கு ஆள் குற்றச்சாட்டுகளைச் சுமத்திய வண்ணம் இருந்தனர்.

ஐ. தே. க. அதிருப்திக் குழுவைச் சேர்ந்த எம். பிக்களில் ஒருவரான சமரவீர வீரவன்னி எதிர்க்கட்சி

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



அப்ப... வீரவன்னி வீராப்புக் காட்டியிருக்கிறார் எண்டு சொல்லுங்கோ......!

இலங்கை இனப் பிரச்சினை: தமிழ் ஈழமே ஒரே தீர்வு!

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அறிவிப்பு

சென்னை, அக். 11

''இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தமிழ் ஈழமே ஒரே தீர்வு.''

— தமிழ்நாடு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரான டாக்டர் எஸ். ராமதாஸ் இப்படித் தெரிவித்தார்.

தமிழகத்தில் அ. தி. மு. க., தி. மு. க. கூட்டணிகளை அடுத்து மூன்றாவது கட்சியாக பாட்டாளி மக்கள் கட்சி உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடைபெற்ற தமது கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

ஜெயலலிதா தலைமையிலான அரசு மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளை தாம் ஆதரிப்பதாக அவர் கூறிய போதிலும், புலிகள் மீதோ, அல்லது அவர்களது ஆதரவாளர்கள் மீதோ, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று வலியுறுத்திச் சொன்னார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாளும் விடயம் தொடர்பாக, எந்தவொரு கொள்கைத் திட்டத்தையும் மத்திய அரசோ, தமிழக மாநில அரசோ இதுவரை அறிவிக்கவில்லை இது கண்டிக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோருவோர் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்படும்

ஜோய்ச் சேர்ந்து ஆறு வாரங்களுக்குள் விசாரணை முடிந்து விடும்

பேர்லின், அக். 11

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் அளிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்படவுள்ளது.

ஜேர்மனியின் பிரதான அரசியல் கட்சிகள் இது குறித்து நேற்று இணக்கத்துக்கு வந்துள்ளன.

புதிய நடைமுறை அடுத்த வருடம் (1992) ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வரும். அதன் பிரகாரம் ஜேர்மனிக்குள் அரசியல் தஞ்சம் கோரிப் பிரவேசிப்பவர்கள் தற்காலிகவர வேற்பு மண்டபங்களில் தங்க வைக்கப்படுவர்.

அவர்களின் அரசியல் தஞ்சம் கோருவதற்கான [illegible] கள் ஆறு வார[illegible] பரிசீலனை செய்யப்பட்டு முடிவு தெரிவிக்கப்படும். சட்ட நடவடிக்கைகள், விசாரணைகள், தீர்ப்புகள் யாவுமே 6 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு புகலிடம் பெறுவதற்குத் தகுதியில்லாதவர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுவர். [illegible]

மாக வெளிநாட்டு அகதிகள் மீது அடிக்கடி தாக்குதல்களும், காடைத் தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டதைத் தொடர்ந்தே, அகதிகள் விடயம் குறித்து தேசிய மட்டத்தில் முடிவு எடுப்பதற்காக அரசியல் கட்சிகள் நேற்றுக் காலை 3 மணி நேரம் கூடி விவாதித்தன.

ஆளும் கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க் கட்சியான சமூக ஜனநாயகக் கட்சி ஆகியனவே தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்தன.

வெளிநாட்டவர்கள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

சின்னஞ்சிறு விளம்பரம்

ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூட்டோ என்ரர் பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-0694]

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை கால வியல், குத்துக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [4325]

சோதிடம்

உங்களுக்கு எத்தகைய கஷ்டமானாலும் தீர்த்து வைக்கப்படும். சாதகத்துடன் வரவும். சாதகம் இல்லாதவர்களும் வரலாம். திராவிட்டால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ சக்தி கணேஷ்உபாசகர், ஸ்ரீமானவ விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். [18344]

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக் 11

நாளை [illegible] கல்லூரியில் நடைபெறவிருந்த நடேஸ்வராக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சபைக் கூட்டம் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். [உ]

வெளிச்சம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், அக் 11

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் "வெளிச்சம்" கலை இலக்கிய, சமூக இதழின் வெளியீட்டு விழா நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழீழத்தின் கலை இலக்கியத் துறையைச் சேர்ந்த பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர். (ச)

வவுனியா அரச ஊழியருக்கு விசேட அ. கார்ட்

யாழ்ப்பாணம், அக் 11

வவுனியாவில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு இராணுவத்தினர் விசேட அடையாளக் கார்ட்டுகளை வழங்கி வருகின்றனர்.

இந்த அடையாளக் கார்ட்டுகளை வைத்திருப்போர் தாண்டிக்குளம் சோதனை முகாம் ஊடாக விரைவாக அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ 3)

பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், அக் 11

மாதகல் படை முகாமிலிருந்து புதன் கிழமை சேந்தாங்குளம் குடியேற்றப் பகுதியை நோக்கி ஸ்ரீலங்கா படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். [ஓ 5]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜோர்ஜ் எட்வின் கமிலஸ்
(யாழ். கனகரட்ணம், ம. ம. வி., A/L மாணவன்)

அன்னை மடியில்: 17 - 10 - 1968
இறைவனடியில்: 12 - 10 - 1987

இறையன்பிலும் பணிவன்பிலும் எம் இதயக் கோவிலிலே
என் மகனே? உதவிடும் வேளை கணப்பொழுதில்
உம் உயிர் மறைந்ததையா!
மறைந்த செய்தி கேட்ட நாள் முதலாய்
அப்பாவும் அம்மாவும் உமது நான்கு சகோதரர்களும்
உருக்குலைந்து கலங்குகின்றோம் ஐயா!
உமக்காக இறைவனை நித்தமும் வேண்டுகிறோம்.

[illegible] ஆத்மமோட்ச வழிபூசை 12-10-91 சனிக்கிழமை காலை 6 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் நடைபெறும்.

நன்றி:

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

372, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[18380]

N. C. A. பருத்தித்துறை

(ஆத்தியடி அருகாமை)

A/L 93 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 19 - 10 - 1991 சனி 7 - 00 a. m.

பொருளியல் - ஸ்ரீரங்கநாதன்
கணக்கியல் - S. K. பிரபாகரன்
வர்த்தகம் - இ. ரகுநாதன்
அளவை - விக்கி
தமிழ் - அமரசிவம்
இந்து - குமுதினி
புவியியல் - கிருஷ்ணராஜா

(சி/0700)

கலை, வர்த்தகக் கல்லூரி
C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை யாழ்ப்பாணம்

G. C. E. A/L 93 பிரிவு I

தமிழ் - திரு. குழந்தை 7-8
இந்துநாகரீகம் - திரு. ஜோதீஸ்வரன் 8-9
பொருளியல் - திரு. உதயன் 9-10
கணக்கியல் - திரு. ஸ்ரீ 10-11
வர்த்தகம் - திரு. இரட்ணம் 11-12
அளவையியல் - திரு. சயந்தன் 12-1
புவியியல் - திரு. வேலாயுதம் 1-2
அரசியல் - திரு. குமார் 2-3

ஆரம்பம்: 19—10—1991
காலை 7-00 மணி

குறிப்பு: வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி/0632)

★ கலை நிகழ்வு ★

கலாநிறுத்யா மாணவர்கள் அளிக்கும்,

பரத நாட்டியம்

இடம்: யா/இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: 12-10-1991 சனிக்கிழமை
நேரம்: மாலை 2-30 — 6-30 மணி வரை
பிரதம விருந்தினர்: திரு. சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
ஆசியுரை: திரு ந. வீரமணிஐயர் (விரிவுரையாளர், பலாப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

செல்வி கவிதா குகதாஸன்
(நாட்டிய விஷாரதா, அடையாறு)

[18385]

றோட்டரக்ட் முதலாண்டு நிறைவும்,

பேராசிரியர் ஞாதர் ஜெயசிங்கம்

பொது அறிவு
இறுதிப் போட்டியும் - 1991

இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் பாடசாலைகள்
வேம்படி - உடுவில் மகளிர் கல்லூரிகள்

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம், சுண்டிக்குளி.

காலம்: 12 - 10 - 1991 நேரம்: காலை 9-00 மணி

பிரதமவிருந்தினர்: பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை (கலைப் பீடாதிபதி பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

★ கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— யாழ். றோட்டரக்ட் கழகத்தினர்.

[சி 0709]

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
தி. சதிர்காமதாஸ்
[போதனாசிரியர், யாழ். [illegible] கல்லூரி தலைமையனார்].
அன்னை மடியில்: 26 - 08 - 1955
ஆண்டவன் அடியில்: 11 - 10 - 1987

அமரர்
ப. யோகானந்தன்
[எழுதுவினைஞர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்]
அன்னை மடியில்: 01 - 03 - 1951
ஆண்டவன் அடியில்: 11 - 10 - 1987

திருமதி
யோ. பவானி
அன்னை மடியில்: 28 - 05 - 1958
ஆண்டவன் அடியில்: 12 - 10 - 1987

(தங்கையும், மைத்துனரும்)

[நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் வீதி வீட்டில் 11 - 10 - 1987 இல் ஷெல் தாக்குதலில் கைலாசம் சேர்ந்தவர்கள்]

வரலாறு படைத்த எங்கள் வற்றாத ஜீவநதிகளே! வந்த இந்தியப் படையின்
ஷெல் அடியால் மாண்டு மடிந்தீர்களே! ஒன்றாக ஏழு பேர் மண்ணுலகை நீத்தீர்களே!
ஆறாத்துயருடனும், மாறாக்கண்ணீருடனும் வாழவிட்டுச் சென்றீர்களே!
என்றும் ஏங்கித் தவிக்கின்றோம். என் செய்வோம் எப்பிறப்பில் காண்போம்.

பெற்றோர், சகோதரர்கள்,
பிள்ளைகள்: [யோ. ரமணன், யோ. ரதீபன்]

11 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு

[18383]

---

45 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வன் சுவாமிநாதன் துஷிந்தன் (தம்பி)
[5 ஆம் ஆண்டு மாணவன் - யா/வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை]

மண்ணகம்: 04 - 09 - 1981
விண்ணகம்: 26 - 08 - 1991

நீண்டதோர் வாழ்வில் நீ இருப்பாய்
என்றிருந்தோம்
ஆண்டதோர் பத்தில் அகன்றேனோ
சென்றாய் நீ!
மீண்டுமுனைக் காண்பவரார் தம்பி!
என்றுமே ஆண்டவனடியில் உன் ஆத்மா
அமரட்டும்.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரி,
உறவினர்கள்.

'துஷிந்தன் இல்லம்',
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

[சி/0710]

உதயன்

மரம் வளர்ப்போம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரம் நடும் திட்டம் ஒன்றைத் தீவிரமாகச் செயல்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். செயலகத்தில் நிகழ்ந்த கலந்துரையாடல் ஒன்றில் இது சம்பந்தமாக விரிவான செயற்திட்டங்கள் ஆராயப்பட்டிருக்கின்றன.

வீதிகளில் நிழல் தரு மரங்களையும், வீடுகளில், வித்தியாலயங்களில், வளவுகளில் பயன் தரு மரங்களையும் நடுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மரம் நடுதல் பருவகால இயக்கமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றல்ல. இருந்து இருந்தாற்போல் மரம் நடும் இயக்கத்தைத் தொடங்குவதும் இடைநடுவில் கைவிட்டு விடுவதும் உகந்ததல்ல.

மரம் நடுதல் வருடம் முழுவதும் நடக்க வேண்டும். இடைவெளி இல்லாமல் சந்ததி சந்ததியாக மரம் நடப்பட வேண்டும். மனிதன் இந்த உலகத்தில் வாழும் காலம் முழுவதும் மரங்கள் நடப்படுதல் அவசியம். அதுதொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். மனிதன் வாழ்வதற்கு மரங்கள் வாழ்வது அவசியம். சுற்றுப்புறச் சூழல், இயற்கை நிலைச் சமன்பாடு பேணப்படுவது அவசியம்.

இதனைப் பண்டைய மனிதன் மனதிற் கொண்டு மரம் உட்பட இயற்கையின் அருஞ் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்தான். ஆனால் நவீன விஞ்ஞான வளர்ச்சியோடும், சனத்தொகை உயர்ச்சியோடும் இயற்கை அளவுக்கு அதிகமாகத் தீண்டப்படுகிறது. அதன் விளைவாக மனிதனது வாழ்வியக்கமே பயமுறுத்தப்படும் கட்டம் வந்திருக்கிறது!

இந்தப் பயங்கரம் எங்கள் பிரதேசத்தை மட்டுமன்றி, உலகம் முழுவதையுமே இப்போது உலுப்பிப் பயமுறுத்துகிறது. அதனால் உலகளாவிய ரீதியில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஓங்கி முழங்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்கான உருப்படியான, பயன்தரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எங்கள் பிரதேசத்திலும் காடுகள் கண்டபடி அழிக்கப்படுகின்றன. குண்டு வீசிக் கூட எரிக்கப்படுகின்றன. மரங்களை நினைத்தவுடன் வெட்டுகிறார்கள். விறகுக்காக, விழாக்களுக்காக பச்சை மரங்களை, பயன்தரு மரங்களைத் தறிக்கிறார்கள்.

ஆறு, மலை இல்லாத இந்தக் குடாநாட்டில் மரவளம் இருந்தால் மட்டுமே மழைவளத்தைப் பேண முடியும். இதனை எம்மவர்கள் உணர்வதாக இல்லை. மூதாதையர் பாடுபட்டு வளர்த்து வைத்த மரங்களை எல்லாம் வெட்டித் தள்ளுகிறார்கள்.

பருவம் கடந்து பட்டுப் போகும் மரம் ஒவ்வொன்றுக்கும் பதிலாக இளங்கன்று ஒன்று நடவேண்டும் என்பதை எங்கள் முன்னோர்கள் ஒரு விதியாக வைத்திருந்தார்கள். இப்போது பத்துப் பச்சை மரங்களை வெட்டித் தறிப்பவர்கள், ஒரு மரத்தையாவது நடுவதற்கு எண்ணுவதில்லை.

இந்தப் பயங்கரம் வரட்சி மிகுந்த எங்கள் பிரதேசத்தை பாலைவனமாக்கிவிடும். எதிர்காலச் சந்ததியினர் இங்கு வாழவொண்ணாது தடுத்துவிடும். இந்த ஆபத்தை எங்களில் எத்தனை பேர் உணர்வுபூர்வமாகப் புரிந்துள்ளோம்?

மரங்களை எங்கள் குழந்தைகளாக எண்ணி, எங்கள் குழந்தைகளை எதிர்காலத்தில் வாழவைக்கும் தோழர்களாக நினைத்து வளர்ப்போமாக. நிலம் எல்லாம் மரம் வளர்த்துப் பசுமை கொழிக்கச் செய்வோமாக.

அல்வாயில் நடமாடும் செயலக அமர்வு: 60வீத முறைப்பாடுகளுக்கு உடன் தீர்வு

வடமராட்சியில் நேற்று நடைபெற்ற நடமாடும் செயலக அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளில் 60 வீதமான முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டது.

அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த அமர்வில் யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் பல திணைக்களங்களின் பிரிவுகளும் இயங்கின.

ஐநூறுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொது மக்களால் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் 60 வீதமான முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இச்செயலகத்தில் கல்வி, உள்ளூராட்சி, கூட்டுறவு, சுகாதாரம், புனர்வாழ்வு, திட்டமிடல், சமூகசேவை, உணவுக்கட்டுப்பாடு, இறப்பு-பிறப்பு, ஆட்பதிவு, வங்கி, சிறுகைத்தொழில், வீடமைப்பு, அரச அதிபர் நிதி, ஓய்வூதியம் ஆகிய பிரிவுகள் பகுதிபகுதியாகச் செயற்பட்டன.

ஒவ்வொரு பகுதிகளிலும் நிறைவேற்று அதிகாரிகள் காணப்பட்டனர். இவர்கள் மக்களின் குறைபாடுகளை உன்னிப்பாகக் கேட்டறிந்ததோடு அவற்றைக் குறித்துச் சென்றனர்.

இச்செயலகத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து குறைந்தளவு மக்கள் காணப்பட்டனர். மற்றைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது குறைகளை அதிகாரிகளிடம் விவரமாக எடுத்துரைத்தனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு, பிறப்பு மற்றும் கல்வி போன்ற பகுதிகளிலேயே கூடுதலான மக்கள் காணப்பட்டனர். [அ165 3]

கொள்ளையரிடமிருந்து

மீட்கப்பட்ட நகைகள் உரியவர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும், கண்ணன் குழுவிடம் இருந்து மீட்கப்பட்ட நகைகளில் சிலவற்றை நேற்று அவற்றின் உரிமையாளர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து இந்த நகைகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

கண்ணன் குழுவினர் விடுதலைப் புலிகளின் பெயரைக் கூறி, ஆயுதமுனையில் நடந்த பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தனர் என்பது தெரிந்ததே.

இந்தக் கோஷ்டியினர் கடந்த மே மாத இறுதிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நகைகளைப் பறிகொடுத்து, நேற்று அதை மீண்டும் பெற்றுக் கொண்டவர்கள் வருமாறு:-

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த பாலசிங்கம் மகேஸ்வரி, சுரேந்திரன் பத்மஜோதி, தச்சன்தோப்பைச் சேர்ந்த மு. நாகராசா, இ. யோகாம்பிகை, கருணானந்தம் தவமணி, மு. இராசையா, திரேஷ் இராசமலர்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த த. இராஜேஸ்வரி, து. ஜெயலட்சுமி, நுணாவில் கிழக்கைச் சேர்ந்த த. பாக்கியநாதன், யாழ். பொன்னம்மான் வீதியைச் சேர்ந்த தெ. அருந்தவநாயகி, அராலி வடக்கைச் சேர்ந்த மரிமுத்து சிவபாக்கியம். (ஓ)

போர்க்காலக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 11

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்புத் தொடர்பாக "போராட்டமும் மக்கள் பங்களிப்பும்" என்ற தலைப்பில் போர்க்கால விளக்கவுரைக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த வரிசையில் இன்று மாலை 6.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் மாலை 7.30 மணிக்கு அளவெட்டி வடக்கு அம்மன் கோவிலடியிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

நாளை மாலை 6.30 மணிக்கு மல்லாகம் முன்பிள்ளையார் கோவிலடியிலும் மாலை 7.30 மணிக்கு தெல்லிப்பளை சைவப்பிரகாசவித்தியாலயத்திலும் இக்கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சிற்றூரவைக்கான சந்திப்பு

இதேவேளை —

இந்த விடயம் தொடர்பாக சிற்றூரவைகளுக்கான சந்திப்பு உடுவில் பகுதியில் இன்று காலை 10 மணிக்கு நாகம்ஸ் திரு அரங்கிலும், தெல்லிப்பளைப் பகுதியில் பிற்பகல் 4 மணிக்கு அளவெட்டி மகாஜனா மண்டபத்திலும் நடைபெறும்.

நாளை சங்கானைப் பகுதியில் பிற்பகல் 4 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் பகுதியில் காலை 10 மணிக்கு வெஸ்லி வெண்திரையரங்கிலும் சந்திப்புகள் இடம்பெறும். (உ)

நந்தியால் தொகுதியில் நேற்று ராவ் வேட்பு மனு

பிரதான எதிர்க்கட்சி போட்டி இல்லை

புதுடில்லி, அக். 11

ஆந்திர மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெறும் நந்தியால் தொகுதியில் போட்டியிடுவதற்கு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வேட்பு மனு தாக்கல் செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆந்திராவில் இருந்து முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் இந்தியப் பிரதமர் ஒருவருக்கு மரியாதை அளிப்பதற்காக, இந்தத் தொகுதியில் அவரை எதிர்த்து தமது வேட்பாளர் போட்டியிடமாட்டார் என்று அங்குள்ள பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் அறிவித்திருக்கிறது.

நாடாளுமன்றத் தொகுதி எதிலும் போட்டியிட்டு எம்.பியாக வராத நிலையில் இந்தியப் பிரதமராக நரசிம்மராவ் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பதவியேற்று ஆறு மாத காலத்தினுள் ராஜ்ய சபைக்கு அல்லது நாடாளுமன்றத்துக்கு ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டாலேயே பிரதமர் பதவியை அவர் தொடர்ந்து வகிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வளர்த்தவரையே கடித்துக் குதறியது குரங்கு!

யாழ்ப்பாணம், அக். 11

ஆவேசம் கொண்டுவிட்ட ஒரு குரங்கு வளர்த்தவரையே கடித்துக் குதறியது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் நல்லூர் சிவன்கோவில் வீதியைச் சேர்ந்த எஸ். இராசையா என்பவரே காயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

[ஓ 15]

நாளை நீதிபதி வர்மா சென்னை வருகை

சென்னை, அக். 11

ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட நீதிபதி வர்மா நாளை சனிக்கிழமை சென்னை வருகிறார்.

ஞாயிற்றுக்கிழமை அவர் ஸ்ரீ பெரும்புதூர் சென்று ராஜீவ் கொலையுண்ட இடத்தைப் பார்வையிட ஏற்பாடாகி உள்ளது.

இவ்விசாரணைக் குழுவைச் சேர்ந்த 5 அதிகாரிகள் ஏற்கனவே தமிழகம் வந்து ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டிருந்தனர். [த]

உள்ளூராட்சி மன்ற பொறுப்பதிகாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 11

யாழ்ப்பாண மாவட்டத்தையும், வன்னிப் பிரதேசத்தையும் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொண்டாவில் செயலகத்தில் நடைபெற உள்ளது.

மாநகரசபை, நகரசபைகளின் விசேட ஆணையாளர்கள், பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்பதிகாரிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [அ]

கிரிக்கெட் உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், அக். 11

லெப். கிரஞ்சீவி ஞாபகார்த்தமாக சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தினர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

7 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளையும், 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன. (ஓ)

இறுதிப் போட்டி நாளை

யாழ்ப்பாணம், அக். 11

பேராசிரியர் ஜூதர் ஜெயசிங்கம் வெற்றிக் கேடயத்துக்கான இறுதிப் போட்டியும், யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றன. யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

[இ]

காலிஸ்தான் புலிகளே தூதுவரைக் கடத்தினர்!

புதுடில்லி, அக். 11

புதுடில்லியில் வைத்து ருமேனிய நாட்டு பதில் தூதுவரைக் கடத்தியது காலிஸ்தான் விடுதலைப் புலிகள் என்ற புதிய அமைப்பு (Liberation Tigers of Khalistan) உரிமை கோரியிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

காலிஸ்தான் விடுதலைப் புலிகள் தலைமைப்பீடத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் ஒருவர், கடத்தலுக்கு தமது அமைப்பு உரிமை கோருவதாக பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் கூறினார் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

பஞ்சாப் மாநிலத்தில் தனிநாடு கோரி 20 சீக்கிய தீவிரவாத அமைப்புகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றன. அவற்றில் காலிஸ்தான் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்று எனக் கூறப்படுகிறது. [உ-எ]

மரம் நாட்டத் தீர்மானம்

யாழ்ப்பாணம், அக். 11

சாவகச்சேரி, கொடிகாமம் பிரதான வீதியோரம் ஐநூறுக்கு மேற்பட்ட மலைவேம்பு மரங்களை நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மில்க்வைற் நிறுவனத்தினர் வழங்கவுள்ள இம் மரக்கன்றுகளை நட்டு, பராமரிக்கும் பொறுப்பை அப்பகுதி உதவி அரச அதிபர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் பனை அபிவிருத்திச் சபையினர் வழங்கும் பனம் விதைகள் அரியாலை மற்றும் வேலணைப் பகுதியில் நடப்படும்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் எலுமிச்சை, தோடை கன்றுகளை நடும் திட்டம் ஒன்றும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மேற்படி தகவல்கள் நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் முடிவில் அறிவிக்கப்பட்டது.

உதவச் சென்றவர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், அக். 11

கிருமிநாசினி அருந்திய ஒருவரைக் காப்பாற்றுவதற்காக அவரை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்த இளைஞர் ஒருவர் இடைவழியில் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

ஆவரங்காலைச் சேர்ந்த கந்தையா சச்சிதானந்தம் (23 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

நீர்வேலி கந்தசாமி கோவில் முன்பாக நேற்றுக் காலை நடந்த இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கிருமிநாசினி அருந்தியவரை அவசரமாக லொறி ஒன்றில் ஏற்றிக் கொண்டு சம்பந்தப்பட்டவர் வந்து கொண்டிருந்தார்.

அப்போது பொம்மர் ஒன்று வட்டமிடவே அவர், லொறியின் மிதிபலகையில் நின்றபடி வானத்தை அவதானித்துக்கொண்டு வந்தார்.

வேகமாக ஓடிக்கொண்டிருந்த லொறி, விதிப் பள்ளம் ஒன்றில் இறங்கி ஏறியது. அச்சமயம் அவர், தவறி விழுந்து, தலை சிதறி அவ்விடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தது.

அதேசமயம் கிருமிநாசினி அருந்தியவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, சுகமடைந்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஓ-15]

காரைநகர் படையினர் நேற்று பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக்.11

காரைநகர் படையினர் நேற்றுப் பகல் 11-15 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர். அதேசமயம் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்றன.

வலந்தலைப் பகுதியில் இருந்து 50 கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இரவு 10-30 மணிக்கும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை—

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவிலும் வலந்தலைச் சந்திப் பகுதியில் இருந்து படையினர் பொன்னாலைப் பகுதியை நோக்கி கலிபர் தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

[ஓ 15]

பலாலி ராணுவத்தினருடன் புலிகள் கடும் மோதல்

யாழ்ப்பாணம், அக். 11

பலாலி முகாம் இராணுவத்தினர் நேற்று முன்தினம் (புதன்) பகல் 1-30 மணியளவில் ஒட்டகப்புலம் செல்வநாயகபுரம் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்றனர். அப்போது விடுதலைப் புலிகள் அவர்களை மறித்து கடும் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

இராணுவத்தினர் விடாது துப்பாக்கிப் பிரயோகங்களையும், ஷெல் தாக்குதல்களையும் நடத்திக் கொண்டே முன்னேறினர். விடுதலைப் புலிகள் சளைக்காது திருப்பித் தாக்கினர்.

நிலைமையைச் சமாளிக்க முடியாத நிலையில் படையினர் பலத்த இழப்புகளுடன் தமது நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து செல்வநாயகபுரம் பகுதியை நோக்கி அவர்கள் துப்பாக்கித் தாக்குதல்களையும் கடும் ஷெல் வீச்சுக்களையும் நடத்தினர்.

இதனால் பொதுமக்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ 15)

மாட்டுக்கு எறிந்த கல் மிதிவெடியில்!

மாடுகளைத் துரத்த எறிந்த கல் மிதிவெடியில் விழுந்ததால் மிதிவெடி வெடித்தது. இச்சம்பவத்தில் கோயில் பூசகர் காயமடைந்தார்.

மாங்குளம் பிள்ளையார் கோவில் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காரைநகரைச் சேர்ந்த சோமஸ்கந்தசர்மா சண்முகானந்த சர்மா [வயது 18] என்பவரே காயமடைந்தவராவார். [இ-15]

மரண அறிவித்தல்கள்

ச. பாலசுப்பிரமணியம்

வைமன் வீதியைச் சேர்ந்த ச. பாலசுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற கட்டடத் திணைக்கள அதிகாரி] 10 - 10 - 1991 வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார். இவர் சொர்ணலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி தனலட்சுமி ஸ்ரீபத்மநாதன், திருமதி பதுமினி சத்தியேந்திரா, கெங்காதரன் [ஜேர்மனி] பிரமோதரன் (ஜேர்மனி) கிரிதரன் (நோர்வே], சசிதரன் (கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஸ்ரீ பத்மநாதன் (அரசினர் வைத்தியசாலை குருநகர்], சத்தியேந்திரா (குவைத்) சுபஷினி, சுபத்திரா, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீகாந்தன், ஸ்ரீசங்கர், டர்சிகா, கிருஷ்ணராஜ், பிரியாந்தி, திவ்வியா, ரஜனி ஆகியோரின் அன்பு பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-10-1991 [வெள்ளிக்கிழமை] இன்று காலை 9-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

13, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

Dr. A. ஸ்ரீபத்மநாதன்
]18387]

ஸ்ரீஜீவகன் திவாகரன்

டாக்டர் ஸ்ரீஜீவகன் - ரசிலா ஆகியோரின் அன்பு மகனும், டாக்டர் சி. சிவலிங்கத்தின் அன்புப் பேரனுமான திவாகரன் 10-10-91 இல் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியை (11-10-91) இன்று காலை 10 00 மணிக்கு மணியன்தோட்டம் துண்டியில் நடைபெறும்.

27/2, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. பரராஜசேகரன்
(மைத்துனர்)

(18119)

குலசேகரம்பிள்ளை நித்தியானந்தராஜா

திரு நித்தியானந்தராஜா [இலங்கை வங்கி. கம்பளை கண்டியில் காலமானார். அன்னார் அராலி வடக்கு காலஞ்சென்ற திரு திருமதி குலசேகரம்பிள்ளையின் [செல்லத்துரை] அன்பு மகனும், திருநெல்வேலி காலம் சென்ற திரு. S. S சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பியின் மருமகனும், தட்சஷினிதேவி [விங்க] இன் அன்புக் கணவரும், சுபோதனா, நிருஷா, பமிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று [10-10-91] மாலை 4 மணிக்கு 221 பேராதனை வீதி, கண்டியில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி S.S. சின்னத்தம்பி
[மாமி]

சபாரட்ணம் லேன்
டலாவி வீதி, திருநெல்வேலி.

[18120]

வைத்திய கலாநிதி

செல்லையா பத்மநாதன்

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செல்லையா பத்மநாதன் புறாணியில் 8-10-91 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற த செல்லையா - இராசம்மாவின் மகனும், சரஸ்வதியின் கணவரும், ஹரிதரன், சுரேன் ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற தவமணி, இராமநாதன், அற்புதம், மனோன்மணி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், கணேசராசா, மகாலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

மகேஸ்வரி வில்லா,
கட்டுடை.

இ. மகாலிங்கம்
[4343]

சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை

காரைநகர், களபூமி, சத்திரந்தையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை [ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கச்சேரியடி] காலமானார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மைத்துனரும், மகேஸ்வரன், விக்கினேஸ்வரன், இரட்ணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-10-91] காலை 10-30 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

இல.10, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் றோட்,
சந்தர்மடம்.

மனைவி, பிள்ளைகள்.

(18122)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இராணுவம், கடற்படை தீவுப்பகுதியில் குவிப்பு!

எழுவைதீவு, அனலைதீவிலும் முகாம்கள்

யாழ்ப்பாணம், 11

தீவுப் பகுதி படை முகாம்கள் கடந்த சில தினங்களாக பலப்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு இராணுவத்தினரும், கடற்படையினரும் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

படையினர் இல்லாத சில தீவுப் பகுதிகளிலும் இப்போது படையினர் இறக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை எழுவைதீவில் பெரும் எண்ணிக்கையான படையினர் தரை இறக்கப்பட்டு உள்ளனர். அடுத்த நாள் (ஞாயிறு) அதிகாலை வேளையில் அனலைதீவில் படையினர் இறக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் காரைநகர், நயினாதீவு, ஊர்காவற்றுறை ஆகிய முகாம்களிலும் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, கடந்த ஒரு வாரகாலமாக அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளுக்குமான படகுப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-125)

ஆகஸ்ட் ஓய்வூதியம்: கட்டுநிதி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், அக். 11

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு ஆகஸ்ட் மாதக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான கட்டுநிதி இலங்கை வங்கியின் யாழ் கிளைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்றுத் தகவல் கிடைத்திருக்கிறது.

யாழ். அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

வங்கி அதிகாரிகள் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கட்டுநிதி சம்பந்தமான உத்தரவைப் பெற்ற பின்னர், ஓய்வூதியம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

அமைச்சரின்றி சிறப்பாக இயங்கும் கல்வி அமைச்சு

ஜனாதிபதி பிரேமா பெருமிதம்

"அமைச்சர் இன்றியே கடந்த ஒருமாத காலமாக கல்வியமைச்சு சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது."

— இப்படிப் பெருமிதத்துடன் கூறுகிறார் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த சர்வதேச ஆசிரியர் தின விழாவில் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சரும் கல்விச் சேவைகள் அமைச்சரும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றனர். இவர்களைக் கொண்டு அமைச்சை சிறப்பாக நடத்த நான் முழு ஒத்துழைப்பு வழங்குவேன் — என்றார் ஜனாதிபதி. [உ-3]

புலிகளின் தாக்குதல் கிழக்கில் தீவிரம்!

இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, அக். 11

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளரான கேணல் சரத் முனசிங்க நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்டார்.

வடபகுதியில் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கும் ஆயுதப்படையினரை திசை திருப்பும் ஒரு நோக்கத்துடன்தான் கிழக்கில் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர் என்றார் அவர்.

ஆனையிறவின் தெற்குப் பகுதியில் தமது கட்டுப்பாட்டை விஸ்தரிக்கும் முயற்சியாகவே ஆயுதப்படையினர் கிளிநொச்சியில் தற்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஆயுதபடையினரின் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே நடத்தப்படுகின்றன குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஆயுதபடையினர் தற்போது தாக்குதல்களை நடத்துவதில்லை."

— இப்படி அவர் மேலும் சொன்னார், (உ-எ)

ஜேர்மனியில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக் குடியேறுவது தொடர்பான தற்போதைய தாராளக் கொள்கையை கடுமையானதாகவும், இறுக்கமானதாகவும் மாற்றியமைக்க வேண்டும் என்று ஆளும் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி கருத்துத் தெரிவித்தது.

ஆனால் சமூக ஜனநாயகக் கட்சி, இந்த விடயம் கருணையோடு நோக்கப்படவேண்டும் என்றும், ஆபத்தான நிலையில் தஞ்சம் கோரி வருபவர்களுக்குப் புகலிடம் கொடுத்தாக வேண்டும் என்றும் வலியுறுத்தியது. இப்போதுள்ள சட்டத்தில் மாற்றம் எதுவும் கொண்டுவரக் கூடாது என்றும் அக்கட்சி வலியுறுத்தியது.

இதே வேளை, வெளிநாடுகளில் இருந்து அரசியல் புகலிடம் கோரி வருபவர்களைத் தற்காலிக வரவேற்பு மண்டபங்களில் தங்க வைப்பது அபாயகரமானது, பாதுகாப்பற்றது என்று அகதிகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பான, அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்;

ஜேர்மனியில் கடந்த வருடத்தில் மட்டும் இரண்டு லட்சம் பேர் அரசியல் அடைக்கலம் கோரியிருந்தனர். இவர்களில் ஒரு சிறிய எண்ணிக்கையினருக்கே அரசியல் புகலிடம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [அ-உ-எ]

அரசைக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேச முயற்சித்தபோது ஆளும் கட்சி எம். பிக்கள் கூச்சலிட்டு குழப்பம் செய்தனர்.

எனினும் உப சபாநாயகர் காமினி பொன்சேகா திரு. வீரவன்னியைப் பேச அனுமதித்தார்.

வீரவன்னி மேலும் கூறியதாவது!-

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டும் என்பதில் சபாநாயகர் உறுதியான கருத்தைக் கொண்டிருந்தார்.

அவரே தாமாக முன்வந்து "35 முதல் 40 ஆளும் கட்சி எம். பிக்களின் ஆதரவைப் பெறுங்கள். இந்த அரசைத் தூக்கி எறியலாம்" — என்று என்னிடம் ஆலோசனை கூறினார்.

இப்போது அவர எம்மை ஆபத்தில் மாட்ட வைத்திருக்கிறார். ஆகவே முகம்மது சாக வேண்டும். துரோகி என்ற முறையில் அவரை முதலில் புதைக்கவேண்டும். — என்று [illegible] மாக உரையாற்றினார். (உ-எ-3)

முகம்மது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களில் ஒருவரை அப்பதவிக்குத் தெரிவு செய்ய முயற்சிப்பார்கள், அந்த முயற்சி வெல்லும் பட்சத்தில் அரசாங்க எம். பிக்கள் பாடு திண்டாட்டமாகிவிடும் அதனைக் கருத்திற்கொண்டே அவர்கள் அல்ஹாஜ் முகம்மதுவை ராஜினாமாச் செய்யவேண்டாம என்று வற்புறுத்தி வருவதாக அறியப்படுகிறது: (அ)

இலங்கை..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் இலக்கம் பற்றிய விடயத்தில் அ. தி. மு. க. தனது நிலையை விரைவில் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளில் அ. தி. மு. க., இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகின்றன.

மாநிலத்தில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையை விடுதலைப் புலிகள் ஏற்படுத்துவர் என்று [illegible] வெறும் [illegible]மே. — இவ்வாறு அவர் [illegible]னார். [உ-எ-3]

வவுனியாவில் ஆசிரியர் கலாசாலை

கொழும்பு, அக். 11

வவுனியாவில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-3)

சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், அக். 11

நாவல் மரத்தில் இருந்து விழுந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த சிறுவன் நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானான்.

கிளிநொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்த சுந்தரம் குகனேசன் (12 வயது) என்ற சிறுவனே இறந்தவன் ஆவான். (ஒ-15)

வெள்ளைப் பிரம்பு தினம்

யாழ்ப்பாணம், அக். 11

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் இம் மாதம் 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் அன்றைய தினம் காலை 8 - 30 மணிக்கு செங்குந்த இந்துக் கல்லூரியில் இது தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். [இ]

நயினை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

சமீபத்தில் இப் பகுதிக்கு விஜயம் செய்த அட்மிரல் கிளென்சி பெர்னாண்டோ பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர் வடபிராந்திய கடற்படைத் தளபதிக்கு இது தொடர்பான பணிப்புரைகளை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம்—

நயினாதீவில் கடந்த சில தினங்களாக இரவில்— மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-த-111)

ஆண்டு - 4
(புலமைப் பரிசில் பரீட்சை - 1992)
சனி, ஞாயிறு — பி. ப. 3-00
ஆரம்பம்: 12-10-1991
★ எமது மாணவர்களுக்கு ஒவ்வொரு போயா தினத்திலும் பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.
BOND கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:
(4839)

வாணி விழா

நாளை சனிக்கிழமை 12-10-1991 அன்று பிற்பகல் 1-30 மணியளவில் யாழ். ரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் அவர்களின் மாணவ, மாணவிகளின் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆசிரியை:

செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்.

[18371]